# இலங்கை பிரச்சனையில் அமெரிக்கா தலையிடலாம்?

விலை ரூபா 4-50

ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 33 திருவள்ளுவர் ஆண்டு 2022 ஆனி 30 இதழ்: 153

யாழ்ப்பாணம் ஞாயிற்றுக்கிழமை 14-7-1991

(வாஷிங்டன்)

இலங்கையில் உள்நாட்டுப் போர்1992 வரை தொடருமானல் ஆசிய உபகண்டம் பிளவுறும் சாத்தியமிருப்பதாகவும் இதன் மூலம் இலங்கை விவகாரத்தில் திரு. ஜோர்ஜ் புஷ் நேரடியாக தலையிடக்கூடிய சாத்தியக் கூறுகள் தோன்றலாமென 'அமெரிக்க அவதானிகள்' தெரிவித்துள்ளனர்.

(4ம் பக்கம் பார்க்க)

## தமிழ் போராளிகளை தடுக்க புதிய படைப் பிரிவு

(சென்னை)

தமிழ்நாடு காவல்துறையில் ''கடலோர காவல் படை'' என்ற தனிப்பிரிவு அமைக்கப்படவுள்ளது.

செல்வி ஜெயலலிதா நேற்று சட்டசபையில் இதைத் தெரி

(4-ம் பக்கம் பார்க்க)

## முஸ்லிம் காங்கிரஸ் மாநாடு ரத்து

(கொழும்பு)

கொழும்பில் இன்று நடைபெறவிருந்த ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் 10-வது தேசிய மாநாடு ரத்துச் செய்யப்பட்டுள்ளது.

இம்மாநாட்டில் பிரதம

[4-ம் பக்கம் பார்க்க]

★ ஆனையிறவில் நாலாம் நாள் யுத்தம்

# பிரதான முகாமை தகர்க்க புலிகளின் தாக்குதல் ஆரம்பம்

[நமது நிருபர் மு. ஈழத்தமிழ்மணி]

ஆனையிறவில் நான்காவது நாளாக நேற்றிரவு படையினர் ஒருங்கே நிலைகொண்டுள்ள பிரதான முகாமை தகர்த்தெறியும் நோக்கில் புலிகள் பசிலன், மோட்டார் ரொக்கட் சகிதம் உக்கிர தாக்குதலை ஆரம்பித்துள்ளனர். படை விமானங்களையும் ஹெலிகளையும் கீழே இறங்கவிடாது புலிகளின் விமான எதிர்ப்பு ஆயுதங்கள் சரமாரியாக தாக்குதலை நடாத்துகின்றன. (4ம் பக்கம் பார்க்க)

## பசிலனால் நிலைகுலைவு

புலிகளின் 'பசிலன்' தாக்குதலினால் ஆனையிறவு முகாமிலுள்ள இராணுவத்தினர் நிலைகுலைந்துபோயுள்ளனர்.

பசிலனின் வெடிச் சத்தத்தினால் முகாமின் பல பகுதிகளில் ஏற்படும் அதிர்வினால் இராணுவத்தினர் அதிர்ச்சியடைந்து வருகின்றனர்.

முகாமின் உள்ளே விழும பசிலனால் பல சேதங்கள் ஏற்பட்டிருப்பதாக தெரியவருகிறது.

## 6,000 அடி உயரத்திலிருந்து தாக்குதல்

இப்பகுதியில் தாக்குதல் நடத்தும் விமானங்கள், ஹெலிகொப்டர்கள் ஆறுயிரம் அடி உயரத்திலிருந்து குண்டுகளைப் போடுவதால் புலிகளின் இலக்குகளைத் தாக்கமுடியாதிருப்பதாகத் தெரியவருகிறது.

ஆறுயிரம் அடிக்குக் கீழ் பதிந்து தாக்குதல் நடத்தினால் கீழேயிருக்கும் புலிகளின் எதிர்த்தாக்குதலை சமாளிக்க முடியாமல்போய்விடும் என்ற அச்சம் காரணமாக விமானங்களிலிருந்து உயரத்திலிருந்து குண்டுகள் வீசப்படுவதாகத் தெரியவருகிறது.

## பொதி போட முடியாத விமானங்கள்

நேற்று 4வது நாளாக இம்முகாமில் ஹெலிகொப்டர்கள் இறங்கவில்லை. புலிகளின் விடாப்பிடியான தாக்குதலினால் ஹெலிகொப்டர், விமானங்களிலிருந்து இம்முகாமுக்கு உணவுப் பொதிகள் போடமுடியாத நிலையேற்பட்டுள்ளது.

கடந்த 4 நாட்களாக ஆனையிறவில் இடம்பெறும் பெரும் யுத்தத்தில் படுகாயமடைந்த 50க்கும் மேற்பட்ட படையினர் தொடர்ந்தும் முகாமினுள்ளேயே முடங்கியுள்ளனர். இவர்களைக் கொண்டுவர விமானப்படையினர் மேற்கொண்ட சகல முயற்சிகளும் புலிகளினால் முறியடிக்கப்பட்டுள்ளது. புலிகளின் தாக்குதலில் தொடர்ந்து பல படையினர் படுகாயமடைந்து வருகிறார்களாம்.

## ஆனையிறவில் 5 இராணுவ முகாம்கள்

ஆனையிறவு பகுதியில் இருந்த ஐந்து இராணுவ முகாம்களில் உல்லாச விடுதி முகாம் ஒரு மணித்தியாலத் தாக்குதலில் புலிகளின் வசமானது.

உல்லாச விடுதியை தம்வசம் வைத்திருக்கும் புலிகள் ஏனைய முகாம்களை நோக்கி பலத்த தாக்குதலை நடத்திவருகின்றனர்.

தடைமுகாம், சின்ன உப்பளம், பெரிய உப்பளம், சந்தையடி போன்ற முகாம்கள் மீது புலிகள் பலத்த தாககுதலை நடத்திவருகிறார்கள்.

## சந்தையடி தடை முகாம்

ஆனையிறவில் தலைமை இராணுவ முகாமாக சந்தையடி இராணுவ முகாம் செயற்பட்டு வருகிறது

இந்த முகாமில்தான் ஹெலிகொப்டர் இறங்கிச் செல்லும் தளம் இருக்கிறது.

ஏனைய முகாம்கள் தாக்கப்படும்போது புலிகளின் தாக்குதலுக்கு ஈடுகொடுக்கமுடியாத இராணுவத்தினர் இந்த முகாமினை நோக்கியே ஓட்டமெடுக்கிறார்கள்.

## நன்னீரின்றி சிரமம்

ஆனையிறவு உல்லாச விடுதி இராணுவ முகாமிலிருந்து குடிநீர் பெற்றுவந்த இராணுவத்தினர் இன்று குடிநீரின்றி பெரும் சிரமப்படும் நிலையேற்பட்டுள்ளது.

(4ம் பக்கம் பார்க்க)

## மேலும் 6 புலிகள் வீரமரணம்

(யாழ்ப்பாணம்)

ஆனையிறவில் விடுதலைப் புலிகளுக்கும் சிறிலங்கா படையினருக்குமிடையே இடம்பெற்றுவரும் கடும் சமரில் மேலும் 6 போராளிகள் வீரமரணமடைந்துள்ளனர்.

ஒரு பெண் போராளி உட்பட 6 போராளிகளின் புகழுடல்கள் நல்லூர் கல்வியங்காடு சந்தையில் பொதுமக்களின் அஞ்சலிக்காக வைக்கப்பட்டது.

பெருந்தொகையான பொதுமக்கள் போராளிகளுக்குத் தங்கள் இறுதி அஞ்சலியைச் செலுத்தினர்.

அதைத் தொடர்ந்து 6 போராளிகளின் புகழுடல்களும் திருநெல்வேலி ஆடிய பாதம் வீதி, இராச வீதி வழியாக எடுத்துச் செல்லப்பட்டு கோப்பாய் மாவீரர் மயானத்தில் தீயுடன் சங்கமமானது.

## இலங்கை எதிர்நோக்கும் மூன்றுபிரச்னைகள்!

[லண்டன்]

இலங்கை அரசு தற்போது மூனறு முக்கிய பிரச்னைகள் குறித்துக் கவலையடைந்துள்ளதாக 'லண்டன் பத்திரிகை' ஒன்று தெரிவித்துளளது.

புதிய இந்திய அரசின் அணுகுமுறை, உதவி வழங்கும் நாடுகளின் நிலைப்பாடு, இலங்கைப் படைகள் தொடர்ந்து எவ்வளவு காலம் தாக்குதலை நடாத்தும் என்பதே இவையாகும்

மேற்படி 3 பிரச்னையும் இலங்கை அரசுக்கு பெரும் நெருக்கடியை தரக்கூடியவை எனவும் அப்பத்திரிகை குறிப்பிட்டுள்ளது. (சி)

## லண்டனில் கிட்டுவிற்கு சிங்களவர் கடிதம்

[கொழும்பு]

தமிழீழ விடுதலைப் புலிகளின் சர்வதேச விவகார பொறுப்பாளர் திரு கிட்டுவிற்கு சிங்களவர் பலர் கொழும்பிலுள்ள பி. பி. ஸி. செய்தி முகவர் கிறிஸ் மொறிஸ் மூலம் கடிதங்களை அனுப்பியுள்ளனர்.

இலங்கை பிரச்னை தொடர்பாக திரு. கிட்டுவிடம் பல கேள்விகளைக் கேட்டு இவர்கள் கடிதங்களை அனுப்பியுள்ளனர்.

[4-ம் பக்கம் பார்க்க]

## பதிவு செய்யாதோர்கள் நாடுகடத்தப்படுவர்

(சென்னை)

தமிழகத்தில் தங்கியுள்ள இலங்கைத்தமிழர்களில் பொலிஸ் நிலையங்களில் தமது பெயர்களைப் பதிவு செய்யாதவர்கள் நாடுகடத்தப்படுவர் என்று மாநில அரசு எச்சரிக்கை செய்துள்ளது.

இலங்கைத் தமிழர்கள்

(4ம் பக்கம் பார்க்க)

-7-1991

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

அல்சேஷன் நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு. பூச்சி நீக்கப்பட்டவை. தொடர்பு: சி. ராஜேந்திரம் (பஜனை மாமா] C/o நியூ பார்மசி, 5-ம் கட்டை ஆஸ்பத்திரி வீதி, மானிப்பாய். [சி-4990)

## தையல் மெஷின்கள்

பாவித்த தையல் இயந்திரங்கள் (மெஷின்கள்) நியாய விலைக்கு வாங்கப்படும், விற்கப்படும். தொடர்புகொள்ள வேண்டிய முகவரி: 103, தையல் இயந்திர விற்பனை நிலையம், சாவகச்சேரி. (சி 4969)

## தரன் ஸ்ரூடியோ

அவசரமாக பாஸ்போட் அடையாள அட்டைப்படங்கள், றபர்சீல்கள், விளம்பர போட், பிளாஸ்ரிக் போட் முதலியன பெறுவதற்கு தரன் படப்பிடிப்பாளர் 189, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம். (சி-4896)

## மண மகள் தேவை

சாயிராம் யாழ். இந்து ஆசிரியர் வயது (29) செவ்வாய் தோஷமற்ற படித்த அழகிய மணமகள் தேவை. தொடர்பு: விளம்பர இல. 4940 C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். சி-4940

## கொம்பியூட்டர் கல்வி

Computer Programming in Basic Language - புதிய பிரிவு ஆரம்பம்: 15-07-91 2-30 மணி வகுப்புகள் திங்கள், புதன் 2-30 — 4-30 I. A. B. வகுப்புகளும் நடைபெறுகின்றன. School of Business Administration, 16, 3-வது குறுக்கு வீதி, யாழ்ப்பாணம் [சி-4967]

## லக்கி தையல் நிலையம்

ஆண்களுக்கான சேர்ட், சோட்ஸ், ஜீன்ஸ் மற்றும் பெண்களுக்கான ஆடைகள் இன்றைய நாகரீக முறையில் உரிய நேரத்தில் தைத்துக் கொடுக்கப்படும். வியாபாரிகளுக்கு விசேட சலுகைகள் உண்டு. 182, கண்டி வீதி, யாழ்ப்பாணம். [சி-4991]

## இறுதியாட்டம் ஒத்திவைப்பு

(வடமராட்சி)

வதிரி பொமேஸ் விளையாட்டரங்கில் நடைபெற்றுவரும் செங்கதிர் நினைவு வலைப்பந்தாட்டச்சுற்றுப்போட்டியில் 7 கழகங்கள் பங்குபற்றின.

லீக் முறையிலான இச்சுற்றுப் போட்டியில் இறுதியாட்டக்கழகங்களாக வதிரி பொமேஸ் விளையாட்டுக் கழகமும் வதிரி டயமன் விளையாட்டுக் கழகமும் தெரிவாகியுள்ளன. இறுதியாட்டம் ஒத்திவைக்கப்பட்டுள்ளது. (56)

## 31-ம் நாள் கண்ணீர் அஞ்சலியும் நன்றி நவிலலும்

(கொக்குவில் மேற்கு - ஓய்வுபெற்ற பொலிஸ் உத்தியோகத்தர்)



அமரர்

### துரையப்பா நடராஜா அவர்கள்

அன்னை மடியில் 20 - 02 - 1909 ஆண்டவன் அடியில்: 14 - 06 - 1991

பாசத்துடன் எங்களைப் பெற்ற அன்னையை இழந்தோம்
பாசமிகு ஆண் சகோதரர் இருவரை இழந்தோம் - இருந்தும்
பாசத்துடன் எம்மை வளர்த்து ஆளாக்கிய அன்புத் தந்தையே!
ஐந்து பெண்களைப் பெற்ருல் அரசனும் ஆண்டியாவான் என்பார்கள்
ஐந்து பெண்களைப் பெற்றும் நீங்கள் ஆண்டியாகவில்லையே - அந்த
ஐந்து கரத்தான் துணை இருந்தது உங்களுக்கு.
எம் நெஞ்சங்களில் நீங்காத இடம் பெற்ற உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்ருேம்.
ஓம் சாந்தி

— அன்பு மக்கள் —

எமது குடும்பத்தலைவரின் மரணச் சடங்கில் கலந்து கொண்டு சகல வழிகளிலும் உதவி புரிந்து அனுதாபம் தெரிவித்த அனைவருக்கும், இன்று அவர் இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்தி கிரியைகளில் பங்குபற்றும் அனைவருக்கும் எம் நன்றிகள் உரித்தாகுக.

மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பீட்டப்பிள்ளைகள்.

சிவகுரு ஒழுங்கை,
கொக்குவில் மேற்கு.
14 - 07 - 91

(சி - 4957)

# தென்னந்தும்புத்தொழிலில் தன்னிறைவு கொள்வோம்

தென்னந் தும்புத் தொழிலை வீட்டுக்கு வீடு குடிசைத் தொழிலாகவும் பெரும் தொழிலாகவும் அல்லது பொழுதுபோக்குத்தொழிலாகவும் மேற்கொள்ள முடியும். தும்பை அடித்து பெறுவதற்கு இரண்டு மரக்கட்டைகளே போதுமானது

தென்னம் பொச்சு மட்டைகளை கிணற்றைச் சுற்றிய ஈரமான நிலப்பகுதிகளில் தாட்டு வைக்கலாம் அல்லது நீர் இறைத்து ஒரு பகுதியை சேருக்கி அச்சேற்றில் இம்மட்டைகளை தாட்டு தண்ணீரால் நனைத்து ஈரலிப்பைப் பாதுகாக்கலாம். இம்முறைகளால் சிறிய அளவில் வீட்டில் சேருகின்ற மட்டைகளில் இருந்து தும்பைப் பெற முடியும்.

சிறிய குட்டைகள், ஏரிகள், கடற்கரைப் பிரதேசங்கள் அண்மையில் இருந்தால் பெரிய அளவில் இம்மட்டைகள் சேகரிக்கப்பட்டு பெரிய அளவிலான தொழிலாக மேற்கொள்ளலாம். கடல் நீராயின் 4-6 மாதங்கள் நீரில் ஊற விட வேண்டும். நன்நீராயின் ஒரு மாதம் ஊறவிட்டாலே போதுமானது. தென்னையிலிருந்து பிடுங்கப்பட்ட தேங்காயின் பச்சை மட்டையாயின் 4-5 நாட்கள் ஊறினுலே போதுமானதாகும்.

கிராமப்புறங்களில் அதிக அளவில் தேங்காய் மட்டைகள் எரிக்கப்பட்டு வீணுக்கப்பட்டு வருகின்றன. இப்பகுதியில் போதிய அளவு விறகுக்குரிய பொருட்கள் காணப்படுவதால் இப்பொச்சுமட்டைகள் விறகுக்காக உபயோகிக்கப்படுவது இல்லை. ஆனுல் இவர்களுக்கு தேவையான தென்னம்தும்பு உற்பத்திப் பொருட்கள்கூட சிங்களப் பிரதேசத்தில் இருந்தே வரவேண்டியுள்ளது.

ஒரு நாளைக்கு ஒருவர் சராசரியாக 12 தும்புத்தடிகள் குறைந்தது உருவாக்க முடியும். ஒன்றின் மொத்த விற்பனவு ரூபா 20 ஆகக் காணப்பட்டால் ஒரு நாள் வருமானம் 240 ரூபாவாகும். ஒரு மாதத்தில் 25 நாட்கள் மட்டும் வேலை நாட்களாகக் கொண்டால் மாத மொத்த வருமானம் 6000 ரூபாவாகும். இதில் தும்பு, தடி, கயிறுச் செலவு 3000 ரூபா எனக் கொண்டால் ஒருவரின் மாத வருமானம் 3000 ரூபாவாகும். இதை குடும்பத் தொழிலாகச் செய்யும் இடத்து 6000 ரூபாவையுமே வருமானமாக மாதா மாதம் பெறமுடியும். இதைவிட தும்பு 15 ரூபாவாகவும் இளைக்கயிறு 90 ரூபாவாகவும் மொத்தமாகவும் சில்லறையாகவும் விற்க முடியும்.

ஆனுல் தற்போது சிறிய அளவில் இத்தொழில் செய்யப்படுகின்றது இவற்றில் மேலும் அக்கறை கொண்டு உற்பத்தியை அதிகரித்து வேலைவாய்ப்பைப் பெறுவதன் மூலமும் எமது தேவையைப் பூர்த்தி செய்ய முடிகின்றது. பணப்புழக்கம் அதிகரிக்கின்றது. இத்தொழிலுக்குத் தேவையான தொழில்நுட்ப அறிவு தேவைப்படுவோர் தமிழீழ ஆய்வு நிறுவனத்துடன் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளலாம்.

- தமிழீழ ஆய்வு நிறுவனம்

# கிராமங்கள் தோறும் விழிப்புக் குழுக்கள் அமைக்க ஆலோசனை

(கொழும்பு)

கிராமங்கள் தோறும் விழிப்புக் குழுக்கள் அமைக்கும திட்டம்பற்றி அரசின் உயர்மட்டம் ஆராய்ந்து வருவதாகவும் மிக விரைவில் இவ்விடயம் தொடர்பாக துரித நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றும் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஜெனரல் சிறில் றணதுங்கா நேற்று நடைபெற்ற பாதுகாப்பு அமைச்சின் கூட்டத்தில் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், பாதுகாப்புப் படையினர் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இடங்களில் கடமைபுரிய வேண்டி இருப்பதால் எல்லா இடங்களையும் பாதுகாக்க படையினரால் முடியாது.

இதுவிடயத்தில் விழிப்புக் குழுக்கள் சிறந்த முறையில் சேவையாற்ற முடியும் என்றும் தெரிவித்தார். (க)

# மாங்குளம் மக்கள் 'வங்கி கிளை புனரமைப்பு

(யாழ்ப்பாணம்)

இராணுவ நடவடிக்கைகளால் பாதிப்புக்குள்ளான மாங்குளம் மக்கள் வங்கிக் கிளை தற்போது துணுக்காய் ப. நோ. கூ. சங்கக் கட்டிடத்தில் தற்காலிகமாக இயங்கி வருகின்றது.

இவ்வங்கியில் கணக்கு வைத்திருக்கின்ற வாடிக்கையாளர்களின் கணக்குகளைப் புனரமைக்கும் வேலை தற்பொழுது தொடக்கப்பட்டுள்ளது.

இவ்வங்கியில் நடைமுறைக் கணக்கு வைத்திருக்கும் கூட்டுறவுச் சங்கங்கள், அரச நிறுவனங்கள், கூட்டுத்தாபனங்கள், தனியார்கள் தங்கள் கணக்குகளுக்குரிய வங்கிக் கூற்று, பற்றுச்சீட்டுக்கள் ஆறு மாதங்களுக்குரிய வற்றைச் சமர்ப்பித்து தங்கள் கணக்குகளைப் புனரமைக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்ருர்கள்.

நடைமுறைக் கணக்கு வைத்திருந்த சகலவாடிக்கையாளர், மேற்படி கிளை முகாமையாளருடன் தொடர்பு கொள்ளும்படி பிராந்திய முகாமையாளர்கேட்டுள்ளார்.

# இராசி பலன்

14 - 07 - 1991

ஞாயிற்றுக்கிழமை

திருதியை மாலை 6-51 வரை ஆயிலியம் பி. ப. 12-40 வரை சித்தயோகம், இராகுகாலம் மாலை 4-30 முதல் 6-00வரை. சுபநேரம் காலை 9-00 முதல் 10-30 வரை.

மேடம்: உற்சாகக் குறைவு, வாழ்க்கைப் பிரச்னை, தொழில் கஷ்டம்.

இடபம்: முதியோர் உதவி, சுபநிகழ்ச்சி, குடும்ப சுகம்.

மிதுனம்: கற்பனை மிகுதி, சகோதர பகை, அலைச்சல்.

கடகம்: கல்வியால் புகழ், தொழில் லாபம், பணவரவு.

சிங்கம்: வாயு தொல்லை, அற்பர் நேசம், அடிமைநிலை.

கன்னி: பதவியால்பெருமை, புத்திரர் சிறப்பு, பயணம்.

துலாம்: பணியாள் சகாயம், பிணக்குகள் அகலுதல், பாராட்டு.

விருச்சிகம்: படிப்பினை, வாக்குமேன்மை, சோம்பல்.

தனுசு: அதிக யோசனை, விதண்டாவாதம், முரண்பாடு.

மகரம்: காரியசித்தி, வைத்திய உதவி, தொழில்லாபம்.

கும்பம்: தானதர்மம், தெய்வீக செலவுகள், இனசன வருகை.

மீனம்: பழைய நினைவுகள், கடன் தொல்லை, குடும்ப பிரிவு.

- ஜோஸ்யர்

# விறகுவெட்ட சென்றவர்கள் சடலமாக மீட்பு

(மானிப்பாய்)

நவாலியிருந்து பூநகரிக்கு விறகு வெட்டச் சென்ற நால்வரில் இருவரின் சடலங்கள் அடையாளம் காணப்பட்டன. மற்றும் இருவரும் இறந்திருக்கலாமென அஞ்சப்படுகிறது.

கடந்த வெள்ளிக்கிழமை வள்ளம் ஒன்றின் மூலம் பூநகரிக்கு புறப்பட்ட நவாலி முருகமூர்த்தி கோவில் வீதியைச் சொர்ந்த கந்தசாமி குணசேகரன் [வயது 30), கந்தசாமி விஜயன் [வயது14], குட்டி என்றழைக்கப்படும் நல்லையா ஜெயரத்தினம் [வயது 28], மாதவன் என்றழைக்கப்படும் நவாலி கிழக்கைச் சேர்ந்த மாதவராசா (வயது 35 ) ஆகியோர் பூநகரி நல்லூர் என்ற காடுகளுக்குச் சென்று விறகுகளை வெட்டி வரும்போது கடந்த 7ந் திகதி இரவு இடம்பெற்ற பலத்த இடிமுழக்கம், மின்னல். பலத்த காற்றுக்களுக்கிடையே சிக்கி வரும்வேளை, அப்பகுயின் அடிக்கடிசென்ற ஹெலிக்கொப்டர்களும் துப்பாக்கி வேட்டுக்களைத் தீர்த்தனவாம். இதன் பிறபாடு இவர்கள் வீடுவந்து சேராததைக் அறிந்த உறவினர்கள் அப்பகுதி கடற்பிராந்தியம் எங்கும் தேடியபின்னர் நேற்று முன்தினம் மாலை ஆனையிறவை அண்டிய கடற்கரையோரத்தில் மாதவராசா, ஜெயரத்தினம் ஆகியோரின் சடலங்கள் கரையொதுங்கி இருக்கக் கண்டுபிடித்தனர்.

இதே வேளை இவர்கள் பாவித்த வள்ளமும் மற்றும் இருவர் பற்றிய தகவல்களும் தெரியவில்லை. ஆனுல் இவர்களும் இறந்திருக்கலாமென அஞ்சப்படுகிறது. (71]

# தொற்று நோய் அபாயம்

(கொழும்புத்துறை)

முல்லைத்தீவுப் பகுதியில் தற்போது ஏற்பட்டுள்ள கடும் வெப்பம் காரணமாகக் காய்ச்சல், சின்னமுத்து, கொப்பளிப்பான். நெருப்புக்காய்ச்சல், கண் நோ போன்ற நோய்கள் பரவிவருன்றன. [154]

# ஹெலி தாக்குதல்

(புலோலி)

தென்மராட்சி கிழக்கு, பச்சிலைப்பள்ளி ஆகிய பகுதிகளில் நேற்று முன்தினம் ஹெலி தாக்குதல்களை நடத்தியது. [61]

# இன்று

(யாழ்ப்பாணம்)

சைவசித்தாந்த உயர் நிறுவனம் ஆரம்பவிழா வழிபாடு வண். கிழக்கு கொண்டலடி விநாயகர் ஆலயத்தில் இன்று 14-ம் தேதி ஞாயிற்றுக்கிழமை காலை நடைபெறும்.

## உல்பா தீவிரவாதிகள் விடுதலை

[புதுடில்லி]

350 உல்பா தீவிரவாதிகளை விடுதலை செய்துள்ளதாக அஸாம் அரசு அறிவித்துள்ளது.

இதேவேளையில் தடுப்புக்காவலிலுள்ள எஞ்சிய தீவிரவாதிகளும் விரைவில் விடுதலை செய்யப்படவுள்ளதாகவும் அஸாம் அரசு தெரிவித்துள்ளது.

## அணு ஆராய்ச்சியை பாகிஸ்தான் தொடரும்

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தான் தனது அணு ஆராய்ச்சித் திட்டத்திலின்றும் பின்வாங்கப்போவதில்லை. பாகிஸ்தானின் அணுநிலையங்கள் மீது எந்தவொருநாடும் தாக்குமாயின் அந்நாட்டுடன் போர்தொடுக்க பாகிஸ்தான் தயாராகவுள்ளது.

இவ்வாறு பாகிஸ்தான் பிரதமர் நவாப் ஷெரிப் கூறியுள்ளார். அவர் மேலும் பேசுகையில் பாகிஸ்தானின் அணு ஆராய்ச்சித் திட்டத்தில் எந்தவொரு நாடும் தலையிடுவதை விரும்பவில்லையென்றும் குறிப்பிட்டுள்ளார். (பூ)

## முறைசாரா கல்வி இறுதிப் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

யாழ். கல்வித்திணைக்களத்திலுள்ள முறைசாராப்பிரிவில் கல்விகற்ற மாணவர்களுக்கு 1990ம்ஆண்டு இறுதிப்பரீட்சை இம்மாதம் 20ம் திகதியும்,21ம் திகதியும் நடைபெறும்.

பரீட்சைகள் காலை 9 மணி தொடக்கம் நான்கு மணிவரை யாழ். மாவட்டத்தில் பயிற்சிகள் மேற்கொண்ட பாடசாலைகளில் நடைபெற ஏற்பாடாகியுள்ளது.

ஹோட்டல் ரேட்ஸ், ரி. வி. திருத்துதல், இலத்திரனியல், பத்திரிகைத்தொழில் போன்ற விசேட பாடங்களிலும் மாணவர்கள் பரீட்சைக்குத்தோற்றுகிறார்கள்.

ஆயிரத்துக்கு மேற்பட்ட மாணவர்கள் பல்வேறு துறைகளில் பரீட்சைக்குத் தோற்றுகின்றார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (152)

## எழுதுவினைஞர் பற்றுக்குறை

[யாழ்ப்பாணம்]

யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையில் எழுதுவினைஞர்கள் பற்றுக்குறை நிலவுகிறது. இதனால் நிர்வாக வேலைகள் பாதிப்படைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

எழுதுவினைஞர்பதவிஆளணியின் பிரகாரம் 46 பேர் கடமையாற்றவேண்டிய இடத்தில் தற்போது 25 எழுதுவினைஞர்கள் மட்டுமே கடமையாற்றுகிறார்கள். (153)

## யாழ். ஆஸ்பத்திரியில் காவலாளி ஊழியர் முறை விரைவில் ரத்தாகும்!

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா வைத்தியசாலையில் இதுவரை காலமும் நடைமுறையிலிருந்துவந்த காவலாளி ஊழியர் முறை விரைவில் ரத்துச் செய்யப்படவுள்ளது.

காவலாளிகள் இதுவரை செய்துவந்த வேலைகள், தனியார் துறை பாதுகாவலர் சேவையினரிடம் ஒப்படைக்கப்படவுள்ளது.

வைத்தியசாலையில் வேலை செய்துவந்த காவலாளிகள் அனைவரும் வேறு வேலைகளுக்கு அமர்த்தப்படுவார்கள் அல்லது அவர்களுக்கு ஒய்வு வழங்கப்படுமென யாழ். போதனா வைத்தியசாலை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

மேற்கூறப்பட்ட மாற்று நடவடிக்கை, இம்மாதக்கடைசியில் அல்லது அடுத்தமாதமுற்பகுதியில் நாடு முழுவதிலுமுள்ள போதனாவைத்தியசாலைகள் அனைத்திலும் நடைமுறைக்கு வரவிருப்பது குறிப்பிடத்தக்கது. (வி-56)

## அன்னை பூபதி நினைவுப் போட்டி முடிவுகள்

(யாழ்ப்பாணம்)

விடுதலைப்புலிள் மாணவர் இயக்கம் கடந்த ஏப்ரல் மாதம் நடத்திய அன்னை பூபதி நினைவுப் பொதுஅறிவுப் போட்டியில் கொத்தணி ரீதியாக மேற்பிரிவு கீழ்ப்பிரிவில் பரிசு பெற்றோர்விபரம்:

முல்லைத்தீவு மாவட்டம்

மேற்பிரிவு; நெடுங்கேணி பீ. ஆன்பொன்கலன் (நெடுங்கேணி ம.வி.). புதுக்குடியிருப்பு இ. மதுசங்கர் [புதுக்குடியிருப்பும.வி],முள்ளியவளை த. புஷ்பகலாராணி (முள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரி), ஒட்டுசுட்டான் சி. சுதாஜினி (ஒட்டுசுட்டான் ம. வி ).

கீழ்ப்பிரிவு: நெடுங்கேணி லோ. விமலராசா (நெடுங்கேணி ம. வி). புதுக்குடியிருப்பு ச காண்டீபன் (புதுக்குடியிருப்பு ம. வி ), முள்ளியவளை பெ மேரிறெஜினா [முள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரி), ஒட்டுசுட்டான் ரெஜினால் அமணயோச।। (ஒட்டுசுட்டா ம வி.).

கிளிநொச்சி மாவட்டம்

மேற்பிரிவு: யோகபுரம் சிதம்பரப்பிள்ளை சிவதர்ஷினி (மல்லாவி ம. வி.), கிளிநொச்சி இராஜேந்திரம் உமாநிதி [மத்திய ம. வி.). உருத்திரபுரம் பங்கராஸ் ஜோயஸ் ஜோயல்பியசீலன் (இந்து ம. வி.), முரசுமோட்டை கந்தசாமி சிவசுப்பிரமணியம் (முருகானந்தா ம. வி.), பரந்தன் சுப்பிரமணியம் சிவகாமி (பரந்தரன் இந்து ம வி.). பாண்டியன்குளம் சோதிலிங்கம் இதயராசன் (பாண்டியன்குளம் ம. வி.).

கீழ்ப்பிரிவு: யோகபுரம் நவரத்தினராஜா கலைவாணி (மல்லாவி ம. வி.), கிளிநொச்சி செல்வரத்தினம் நந்தினி (மத்திய ம. வி.), உத்திரபுரம் பொன்னம்பலம் கேமதர்சினி (இந்து ம. வி.), முரசுமோட்டை அன்ரன் நிசாந்தன் முருகானந்தா [ம வி.], பரந்தன் நிர்மலநாதன சமுந்தன் (பரந்தன் இந்து ம வி.), பாண்டியன்குளம் வல்லிபுரம் விக்கினராசா (பாண்டியன் குளம் ம.வி.).

(தொடரும்]

## தினமும் 75 கிலோ பனஞ்சீனி

[பண்டத்தரிப்பு]

சண்டிலிப்பாயிலுள்ள பனம்சீனித் தொழிற்சாலையில் உற்பத்தி செய்யப்படும் பனம் சீனி ஒரு கிலோ 47 ரூபா 75 சதமாக விற்பனை செய்யப்பட்டு வருகின்றது.

சங்கானை வடிசாலை சமாஜத்தின் நிர்வாகத்தின் கீழ் இயங்கி வரும் இத்தொழிற்சாலையில் நாளொன்றுக்கு 75 கிலோ பனம் சீனி உற்பத்தி செய்யப்பட்டு வருவதாக தெரிவிக்கப்படுகின்றது. [72)

## பட்டேலுக்கு 'பாரத ரத்னா' விருது

[சென்னை]

இந்தியாவின் 'இரும்பு மனிதர்' என வர்ணிக்கப்படும் சர்தார் வல்லபாய் பட்டேலுக்கு இந்தியாவின் அதிஉயர் விருதான 'பாரத ரத்னா' விருது நேற்று வழங்கப்பட்டது.

வல்லபாய் பட்டேலின் பேரன் விதின் தயாபாய் பட்டேல் ஜனாதிபதி ஆர் வெங்கட்ராமனிடம் இவ்விருதைப் பெற்றுக்கொண்டார்.

இந்திய சமஸ்தானங்களை ஒன்றிணைத்த பெருமை இவருக்கு உண்டு. (க)

## மஞ்சள் இல்லம் முதலிடம்

[பருத்தித்துறை]

பருத்தித்துறை கற்கோவளம் மெதடிஸ்தமிஷன் தமிழ்க்கலவன் பாடசாலை இல்லங்களுக்கிடையேயான மெய்வல்லுநர் விளையாட்டுப் போட்டியில் மஞ்சள் இல்லம் (அருணன் இல்லம்) முதலாம் இடத்தைப்பெற்றுக் கொண்டது. சிவப்பு இல்லம் (ஆதித்தன் இல்லம்) இரண்டாம் இடத்தையும் பச்சை இல்லம் (ஆதவன் இல்லம்) மூன்றும் இடத்தையும் பெற்றுக்கொண்டன.

பாடசாலை அதிபர் தங்கராஜா தலைமையில்நடைபெற்ற இவ்விளையாட்டுப் போட்டியை கற்கோவளம் சிற்றூரவைத்தலைவர்திரு.எஸ். அருமைதுரை புலிக்கொடியை ஏற்ற, பருத்தித்துறை நகராளுமன்றச் செயலாளர் திரு. கே. சண்முகநாதன் குத்துவிளக்கு ஏற்றி ஆரம்பித்துவைத்தார்.

வடமராட்சி கோட்டஉதவிக் கல்விப்பணிப்பாளர் திரு.எஸ். செல்லத்துரை பிரதம விருந்தினராகவும் பருத்தித்துறை கொத்தணி அதிபர் திரு எஸ். பாலசிங்கம் சிறப்புவிருந்தினராகவும் கலந்து கொண்டனர்.

## ஊர்காவற்றுறை மக்கள் வங்கிக் கிளை புனரமைப்பு வேலைகள்

(யாழ்ப்பாணம்]

கடந்தகால இராணுவ நடவடிக்கைகளால் பாதிப்புக்குள்ளான ஊர்காவற்றுறை மக்கள் வங்கிக்கிளை தற்போது ஸ்ரான்லி வீதி மக்கள் வங்கிக் கிளைக் கட்டிடத்தில் தற்காலிகமாக இயங்கி வருகின்றது.

இவ்வங்கியில் கணக்கு வைத்திருந்த வாடிக்கையாளர்களின் கணக்குகளைப் புனரமைக்கும் வேலை தற்பொழுது தொடங்கப்பட்டுள்ளது. இவ்வங்கியில் நடைமுறைக்கணக்கு வைத்திருக்கும் கூட்டுறவுச் சங்கங்கள், அரச நிறுவனங்கள், கூட்டுத்தாபனங்கள், தனியார்கள் தங்கள் கணக்குகளுக்குரிய சான்றுகளைச் சமர்ப்பித்துத் தங்கள் கணக்குகளைப் புனரமைக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றார்கள்.

நடைமுறைக்கணக்கு வைத்திருந்த வாடிக்கையாளர்கள் யாவரும் உடனடியாக மக்கள் வங்கியின் ஊர்காவற்றுறைக் கிளை முகாமையாளருடன் தொடர்பு கொள்ளும்படி பிராந்திய முகாமையாளர் கேட்டுக்கொள்ளுகின்றார்.

## புதிய கல்வியதிகாரி

(பருத்தித்துறை)

புலோலி கொத்தணி அதிபரும், பருத்தித்துறை வேலாயுதம் மகாவித்தியாலய அதிபருமான திரு. வீ.எஸ். ஏகாம்பரநாதன் கல்வித்திணைக்களத்தால் கல்வி அதிகாரியாகப் பதவி உயர்த்தப்பட்டுள்ளார். பதவி உயர்வு பெற்ற திரு. ஏகாம்பரநாதன் வடமராட்சி கோட்டக்கல்வி அலுவலக கல்வி அதிகாரியாகப் பொறுப்பேற்றுள்ளார். (5ʌ]

## கட்டுப்பாட்டு விலையில் பொருட்கள்

(காங்கேசன்துறை)

கொழும்பிலிருந்து லொறிகளில் தருவிக்கப்பட்ட அத்தியாவசியப் பொருட்களைக் கட்டுப்பாட்டு விலையில் மக்களுக்கு விநியோகிக்க தெல்லிப்பழை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

மேற்படி ப. நோ. கூ. சங்க லொறிகள் மூலமும், தனியார் லொறிகள் மூலமும் மேற்படி சங்கத்தால் கொழும்பிலிருந்து தருவிக்கப்பட்டுள்ள அரிசி, சீனி, மா, தேங்காய்எண்ணை, மற்றும் பலசரக்குப் பொருள்கள்போன்றவற்றைசங்கத்தின் பங்கீட்டு அட்டை வைத்திருக்கும் பாவனையாளர்களுக்குக் கட்டுப்பாட்டு விலையில் விநியோகிக்க சங்கம் ஏற்பாடு செய்துள்ளது. (86)

## ஆயுர்வேதகல்லூரி மாணவர் இறுதி ஆண்டுப் பரீட்சை

(பண்டத்தரிப்பு)

யாழ். லங்கா ஆயுர்வேதக் கல்லூரி மாணவர்களின் டி. ஏ.எம். இறுதிவருடப் பரீட்சை ஆகஸ்ட் மாதம் 31ம் திகதியன்று முன்னர் அறிவித்தபடி நடைபெறமாட்டாது என்று தெரியவருகின்றது.

கல்லூரி பதில் அதிபர் டாக்டர் சுகந்தன் இன்னாசித்தம்பி இதுதொடர்பாக கொழும்பிலுள்ள ஆயுர்வேத ஆணையாளருடன் செஞ்சிலுவைச் சங்கத்தின் ஊடாக தொடர்பு கொண்டு விசாரித்தபோது இப்பரீட்சைக்கான ஏற்பாடுகள் யாவும் பூர்த்தியான பின்பே பரீட்சை நடைபெறும் திகதி அறிவிக்கப்படும் என்று பதில் அளிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

ஆகவே மேற்படி மாணவர்கள் யாழ். லங்கா ஆயுர்வேத கல்லூரி பதிவாளருடன் தொடர்பு கொண்டு இப்பரீட்சைத் திகதி பற்றிய நேரசூசி விபரங்களை அறிந்துகொள்ள முடியும் என்று டாக்டர் சுகந்தன் இன்னாசித்தம்பி தெரிவித்தார். (72)

## நுண்கலைக்காட்சி கலை விழா

(உடுவில்)

மயிலணி மகாவித்தியாலயத்தில் இம்மாதம் 18, 19, 20ம் திகதிகளில் நுண்கலைக் கண்காட்சியும் கலைவிழாவும் அதிபர் திரு. சு. துரைசிங்கம் தலைமையில் நடைபெறும்.

பிரதம விருந்தினராக மருதனார்மடம் கோட்டபிரதம கல்வி அதிகாரி திரு. ச. தனஞ்செயனும், சிறப்புவிருந்தினர்களாக கல்விஅதிகாரி திரு. தம்பித்துரை - சங்கீத பாடகல்வி அதிகாரி திரு. பொ கணபதிப்பிள்ளை. கொத்தணி அதிபர் திரு. ப. விக்கினேஸ்வரன் ஆகியோரும் கலந்து கொள்வர்.

## இடம்பெயர்ந்தவர்கள் முதலுதவிப்படை பயிற்சியைத் தொடரலாம்

[பண்டத்தரிப்பு]

தீவுப்பகுதியிலிருந்து இடம்பெயர்ந்துள்ள சென்.ஜோன்ஸ் சர்வதேச முதலுதவிப்படையில் பயிற்சியை பெற்று இடையில் பயிற்சியைத் தவறவிட்டவர்களும், புதிதாக படையில் சேர்ந்து முதலுதவிப் பயிற்சியை பெறவிரும்புபவர்களும் யாழ். லங்கா ஆயுர்வேத கல்லூரியில் நடைபெற்றுவரும் பயிற்சி வகுப்பில் கலந்து கொள்ள முடியுமென்று படையின் வடபிரதேச ஆணையாளர் டாக்டர் சுகந்தன் இன்னாசித்தம்பி அறிவித்துள்ளார்.

தமது முதலுவிப் பயிற்சி நெறியை பூர்த்திசெய்து அதற்கான சான்றிதழ்களை இதுவரை பெறுதவர்களும் நற்சான்றிதழ்களைப் பெறவிரும்புவோரும் யாழ். லங்கா ஆயுர்வேதக் கல்லூரியில் தம்முடன் தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ளலாமென்றும் டாக்டர் சுகந்தன் இன்னாசித்தம்பி மேலும் அறிவித்துள்ளார். [72)

## போட்டியின்றி தெரிவு

(புலோலி)

புதிதாக உருவாக்கப்பட்ட வடமராட்சி கிழக்கு (மருதங்கேணி) ப.நோ.கூ.சங்கத்தின் இயக்குநர் சபை போட்டியின்றி ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டது.

இச்சங்கத்தின் தலைவராக சி. பொன்னம்பலமும், உபதலைவராக வ. பொடிசிங்கமும் ஏனைய உறுப்பினர்களாக வெ. இராசநாயம், மு. தங்கவேலு, க. ஆனந்தமூர்த்தி மு. நகுலராசா, க. தங்கமயில் ஆகியோரும் தெரிசெய்யப்பட்டனர். [61)

## ராஜீவ் கொல்லப்பட்ட இடத்திலிருந்து
# தப்பியோடிய 12 பொலிஸார் தற்காலிக பதவி நீக்கம்!

(சென்னை)

ராஜீவ்காந்தி கொல்லப்பட்ட குண்டு வெடிப்பின்போது அவ்விடத்திலிருந்து தப்பியோடிய டி.ஐ.ஜி.உட்பட பொலிஸ் உத்தியோகத்தர் பதவியிலிருந்து இடைநிறுத்தப்பட்டுள்ளனர்.

மே 21ல் இடம்பெற்ற குண்டுவெடிப்பின்போது அவ்விடத்திலிருந்து காங்கிரஸ் தலைவர்கள் அ. தி. மு. க தலைவர்கள், பொலிஸார் உட்பட நூற்றுக்கணக்கானோர் அவ்விடத்தைவிட்டு தப்பியோடியதும் தெரிந்ததே.

கடமையை உதாசீனம் செய்ததற்காக 12 பொலிஸாரும் பதவி இடைநிறுத்தப்பட்டனர். [சி]

# காவலூர் படைகள் கடும் ஷெல் தாக்குதல்

(வேலணை)

ஊர்காவற்றுறை படையினர் நேற்று முன்தினமிரவு 11 மணியளவில் குடிமனைகளை நோக்கி 22க்கும் மேற்பட்ட இடைவிடாத ஷெல் தாக்குதல்களை மேற்கொண்டனர்.

இவ்வாறு மேற்கொண்ட ஷெல் தாக்குதல்களினால் சரவணையில் சில வீடுகள்எரிந்துள்ளன. வேலணை, மண்கும்பான் அல்லைப்பிட்டி, மண்டைதீவு மக்களும் பயப்பீதிகாரணமாக இரவோடு இரவாக பாதுகாப்பான இடங்களைதேடி வெளியேறினர்.

இதேவேளை பலாலி முகாமிலிருந்து ஏவப்பட்ட இரு ஷெல்கள் வேலணையில் வீழ்ந்து வெடித்துள்ளன. (75)

## ஆறுமாத காலத்தில் சுங்கப் பகுதியினருக்கு 5 கோடி வருமானம்

(கொழும்பு)

கடந்த 6 மாத காலத்திற்குள் 106 கிலோ தங்கக் கடத்தலை கட்டுநாயக்கா விமான நிலைய சுங்கப் பகுதியினர் முறியடித்து 5 கோடியே நாற்பது லட்சம் ரூபா வருமானத்தைப் பெற்றுள்ளனர்.

106 கிலோ 300 கிராம் தங்கத்தைக் கைப்பற்றியதன் மூலம் அதற்கு விதிக்கப்பட்ட குற்றப் பணமே இவ்வாறு வருமானமாகப் பெறப்பட்டது.

## அவசர கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

விடுதலைப் புலிகள் மாணவர் இயக்கத்திலுள்ள அனைத்து உறுப்பினர்களையும் இன்று காலை 9-00 மணிக்கு யாழ். வைத்தியசாலையில் சிரமதானம் செய்யவிருப்பதால் யாழ். வைத்தியசாலைக்கு முன்பாக உள்ள 'பாலம்' பணிமனைக்குச் சமுகம் தரும்படி வேண்டிக்கொள்கின்றனர். [வி]

# கொழும்பு குண்டுவெடிப்பு
## காப்புறுதி செய்வோர் அதிகரிப்பு

(கொழும்பு)

கொழும்பில் அண்மையில் கூட்டுப்படை தலைமையகத்தில் இடம்பெற்ற குண்டு வெடிப்பு சம்பவத்தையடுத்து தற்போது ஆயுள் காப்புறுதி செய்வோர் தொகை அதிகரித்து வருகிறதாம்.

குறிப்பாக பாடசாலைப் பிள்ளைகளுக்கே இக்காப்புறுதி செய்யப்படுவதாக கொழும்புச் செய்தி ஒன்று தெரிவிக்கின்றது.

மேலும் கொழும்பு நகர்ப் பகுதியிலுள்ள பாடசாலை பிள்ளைகளது நலன் பற்றியும், பாடசாலைகளுக்கு அருகிலிருக்கும் படைமுகாம்கள் குறித்தும் பல பெற்றோர்கள் அச்சம் தெரிவித்துள்ளதும் குறிப்பிடத்தக்கது. (சி)

### தமிழ் போராளிகளை

(1ம் பக்கத் தொடர்ச்சி)

வித்தார். அவர் மேலும் பேசுகையில்:- இலங்கைப் போராளிகளின் ஊடுருவலைத் தடுக்கும் நடவடிக்கையாகவே இது மேற்கொள்ளப்படுகிறதென்றும், மாநிலத்தில் ஆயுத காவல்படை அதிரடி நடவடிக்கையில் ஈடுபடக்கூடிய வகையில் மாற்றியமைக்கப் படவுள்ளன என்றும் கூறினார், (பூ)

## போராளிகள் பராமரிப்பு

[யாழ்ப்பாணம்]

காயமடைந்த போராளிகளை பராமரிப்பதற்கும் அவர்களுக்கு வேண்டிய உதவிகளைச் செய்வதற்கும் பல மக்கள் முன்வந்துள்ளனர்.

காயமுற்ற போராளிகளுக்கு உணவுப் பொருள்கள். படுக்கைகள் ஆகியவற்றை பொது மக்கள் தாமாகவே வழங்கி வருகின்றனர்.

## இலவச பயிற்சி நிலையம்

(யாழ்ப்பாணம்)

வடபிராந்திய சுருட்டுத் தொழிலாளர் சங்கம்,தையல், தட்டச்சுபயிற்சிநிலையம்ஒன்றை திறந்துவைத்துள்ளது.

இப்பயிற்சி நிலையத்தில் 200க்கும் மேற்பட்டோருக்கு இலவசமாகவே மேற்படி பயிற்சிகளை தாம் அளிக்க இருப்பதாக வடபிராந்திய சுருட்டுத் தொழிலாளர் சங்கத்தின் தலைவர் திரு. செல்லையா உருத்திரா தெரிவித்தார். (வி)

## அவசர அழைப்பு

[யாழ்ப்பாணம்]

பலாலி-கோப்பாய் பயிற்சி ஆசிரியர் சேவை ஒன்றியத்தின் செயற்திட்டங்களில் இணைந்து சேவையாற்றும் உறுப்பினர்களும், ஏனைய சகல பயிற்சி ஆசிரியர்களும் நாளை திங்கட்கிழமை காலை 9 மணிக்கு கோப்பாய்-பலாலி ஆசிரிய கலாசாலையில் நிகழவிருக்கும் 'இன்றைய சூழ்நிலையில் நாம் ஆற்றவேண்டிய சேவைகள்' பற்றிக் கலந்துரையாட ஒன்றுகூடுமாறு அவசரமாக அழைக்கப்படுகின்றனர்

* * *

[யாழ்ப்பாணம்]

கற்பித்தல் பயிற்சியில் ஈடுபட்டுள்ள சகல பலாலி ஆசிரிய கலாசாலை ஆசிரிய மாணவர்களும் விரிவுரையாளர்களும் நாளை திங்கள் மீண்டும் கலாசாலைக்கு சமூகமளிக்கும்படி அதிபர் கேட்டுக்கொள்கின்றார்.

# வெளிநாட்டு சக்திகள் இலங்கை மீது நெருக்கடி

[கொழும்பு]

இலங்கை அரச படைகள் மேற்கொண்டுவரும் மோசமான 'மனித உரிமை மீறல்' நடவடிக்கைகள்மூலம்அரசுக்கு பெரும் நெருக்கடி ஏற்பட்டு வருவதாக 'ஐலண்ட்' பத்திரிகை தெரிவித்துள்ளது.

மனித உரிமை மீறல்களால் இலங்கைக்கு உதவி வழங்க பல நாடுகள் தயங்குகின்றன, உதவி வழங்கும் பல நாடுகள் நிபந்தனைகளை முன்வைத்துள்ளன, மனித உரிமை சபைகள் இலங்கைக்கு எதிராகப் பிரசாரம் செய்கின்றன.

அரசு பெரும் இராணுவத் தாக்குதல்கள் மேற்கொள்வதை இலங்கைக்கு வெளியிலுள்ள பல சக்திகள் கட்டுப்படுத்தும்காலம்உருவாகியுள்ளதாகவும் 'ஐலண்ட்' குறிப்பிட்டுள்ளது. (சி)

## குடிநீர் வசதி

(பண்டத்தரிப்பு)

பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டத்தில் கல்லூரியில் குடி தண்ணீர் வசதி, மலசல கூட வசதி ஆகியவற்றை ஏற்படுத்திக் கொடுப்பதென்று தீர்மானிக்கப்பட்டது.

கல்லூரி உப அதிபர் திருமதி க. சண்முநாதன் தலைமையில் இக்கூட்டம் நடைபெற்றது.

# போரிடும் புலிகளுக்கு சிற்றுண்டி அனுப்பியபெண்

(யாழ்ப்பாணம்)

ஆனையிறவு முகாமிலுள்ள இராணுவத்துடன் போரிடும் போராளிகளுக்கு முட்டைமா மற்றும் சிற்றுண்டிகளை பெண்மணி ஒருவர் அனுப்பிவைத்தார்.

யாழ். நகரிலுள்ள புலிகளின் முகாம் ஒன்றுக்கு வந்த பெண்மணி ஒருவர் முட்டை மா உட்பட பல உணவுப்பொருட்களை தான் சேகரித்து வந்திருப்பதாகவும் இதனை ஆனையிறவில் போர் புரியும் போராளிகளுக்கு அனுப்பி வைக்குமாறும் வற்புறுத்தினாராம்.

இவரின் வேண்டுகோளை ஏற்றுக்கொண்ட புலிகள் இவ்உணவுப் பொருள்களை ஆனையிறவிற்கு அனுப்பி வைத்தனர்.

இதேபோன்று பலர் செவ்விளநீர், உணவுப் பொருள்கள் பெட்சிற். தலையணைகள் உட்பட பல பொருட்களை தினமும் முகாம்களுக்குச் சென்று வழங்கி வருவதனை காணக்கூடியதாகவுள்ளது.

### முஸ்லிம்

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

விருந்தினராக ஜனாதிபதி ஆர். பிரேமதாஸா கலந்து கொள்ளவிருந்தார். எதிர்பாராத விதமாக இம்மாநாடு ரத்துச் செய்யப்பட்டுள்ளதாம்.

இம்மாநாடு ரத்துச் செய்யப்பட்ட தற்கான காரணம் எதுவும் இதுவரை தெரிவிக்கப்படவில்லை. (சி)

## சுபநேரம் பார்க்கும் இராணுவக் கமாண்டர்

[யாழ்ப்பாணம்]

வவுனியாவிலிருந்து பாரிய தாக்குதலை நடாத்துவதற்காக சுபதிகதியைத் தெரிவு செய்து தருமாறு வவுனியா இராணுவக் கமாண்டர், வவுனியா சிவன் கோவில் பூசகரையும், பிரதமவிகாராதிபதியையும் கேட்டுள்ளார். (எஸ்)

### இலங்கைப் பிரச்னை

(1ம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கை உள்நாட்டுப்போர் பிராந்திய தாக்கங்களை உள்ளடக்கிய பிரச்சனையாக அமெரிக்கா கருதுவதால் இப்பிரச்னையில் அமெரிக்க தலையீடு வரலாம்.

மேலும் பிராந்திய தாக்கங்களை உருவாக்கும் பிரச்னை எனும் பட்டியல் ஒன்றை அமெரிக்கா தயாரித்துள்ளது. இதில் தெற்காசிய பிராந்தியத்தில் இலங்கைப் பிரச்சனையும் குறிப்பிடப்பட்டுள்ளது. இதற்கு அமெரிக்க நிர்வாகம் மிகுந்த முக்கியத்துவமளித்தும் வருகிறதாம். [சி]

### பதிவு செய்யாதவர்கள்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பொலிஸ் நிலையங்களில் தம்மைப்பதிவு செய்யும் கால எல்லை இம்மாதம் 19-ம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

இக்கால எல்லை இனியொரு தடவை நீடிக்கப்படமாட்டாது என்றும் எனவே உடனடியாக தமது பெயர்களைப் பதிவு செய்யுமாறு இலங்கைத் தமிழர் கேட்கப்பட்டுள்ளனர்.

### லண்டனில் கிட்டு

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

தமது கேள்விகளுக்கான திரு. கிட்டுவின் பதில்களை பி. பி. ஸி. மூலம் ஒலிபரப்புமாறும் மேற்படி சிங்களவர் பி. பி. ஸி. நிருபரை கேட்டுமுள்ளனர். [மா-சி]

### ஆனையிறவு

(1ம் பக்கத் தொடர்ச்சி)

முகாம் சுற்றுடலில் மும்முனையிலிருந்து மிதிவெடிகள் அகற்றப்பட்டு புலிகள் தங்களைப் பலப்படுத்திக் கொண்டு தங்கள் உக்கிரத் தாக்குதலை ஆரம்பித்துள்ளனர்.

விமானத்தாக்குல்கள் அகோரமாக இருக்கிறது. இதற்கு மத்தியிலும் விடுதலைப் புலிகள் முகாமை சுற்றி உக்கிர தாக்குதலை மேற்கொள்ளும் அதேவேளை முகாம்பகுதியிலிருந்து படையினர் தங்கள் சக்திக்குட்பட்ட வரையில் தங்களது துப்பாக்கிப் பிரயோகங்களையும், ஷெல்தாக்குதல்களையும் மேற்கொண்டபடி இருக்கின்றனர். (56]

# ரத்ததானம் செய்ய மக்கள் முண்டியடிப்பு

[யாழ்ப்பாணம்]

ஆனையிறவு இராணுவ முகாம் மோதலல் காயமடையும் போராளிகளுக்கு இரத்தம் வழங்குவதற்குப் பெருமளவு பொதுமக்கள் முன்வந்துள்ளனர்.

இரத்த தானம் செய்வதற்காகப் பொதுமக்கள் வரிசை வரிசையாகக் காத்திருக்கின்றனர்

நேற்று மட்டும் 115 பொது மக்கள் இரத்ததானம் செய்துள்ளனர்.

ஆசிரியர்கள், மாணவர்கள் உட்பட பல்வேறு பொதுமக்கள் பலர் இரத்ததானம் செய்து வருகிறார்கள்.

# மலையக முன்னணி மீது தீவிர விசாரணை

(கொழும்பு)

புலிகளுடன் தொடர்பு வைத்திருப்பவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் மலையக மக்கள் முன்னணி முக்கியஸ்தர்கள் பலர் பொலிஸாரினால் தீவிரமாக விசாரணை செய்யப்பட்டு வருகின்றார்கள்.

இக்கட்சியின் தலைவர் சந்திரசேகரன் செயலாளர் காதர் ஆகியோர் ஏற்கனவே கைது செய்யப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

### நன்னீரின்றி சிரமம்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இதனால் உப்பு நீரை குடிநீராக பயன்படுத்தி வருகின்றனராம்.

# சேதமுற்ற ஹெலிகள் பலாலியில்

ஆனையிறவில் புலிகளின் தாக்குதலினால் சேதமடைந்த இரு ஹெலிகொப்டர்கள் பலாலி இராணுவ முகாமில் தரையிறக்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

இப்பத்திரிகை ''ஈழநாடு'' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1991-ம் ஆண்டு ஜூலை 14ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka under Licence Number B/180385/81